# டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி முழுமையாகப் பாதிப்பு!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு! முதல் பக்கத் தொடர்ச்சி...

பொறுப்பேற்க வேண்டும். பரவாயில்லை, இந்தக் கைது நடவடிக்கைகளுக்கெல்லாம் பயந்தவன் கிடையாது, இந்த உதயநிதி என்பது இந்த அரசுக்கு இந்நேரம் தெரிந்திருக்கும்.

### மிகப்பெரிய போராட்டம்!

கடந்த 3ஆம் தேதி, தஞ்சையில் விவசாயிகளுக்கு ஆதரவாக, அவர்களின் கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்று ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினோம். நான் கலந்துகொண்டு என் தலைமையில் நடந்தது. நம் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், விவசாயிகள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் வந்து கலந்து கொண்டார்கள். நான் தலைமை தாங்கி கடைசியாகப் பேசினேன்.

கிட்டத்தட்ட 22 நிமிடம் பேசியிருக்கிறேன். காவிரியில் தண்ணீர் வரவில்லை என்று சொன்னேன். அதுமட்டும் சொல்லவில்லை, இன்னும் நிறைய பேசியிருக்கிறேன். டம்மி முதலமைச்சர் என்றேன், ஒரு கேடுகெட்ட அரசாங்கம் அமைந்திருக்கிறது. ஒரு வெட்கங்கெட்ட முதலமைச்சர் தமிழ்நாட்டுக்கு அமைந்திருக்கிறார் என்று சொன்னேன். தேர்தல் வாக்குறுதி கொடுத்தீர்களே, அதையெல்லாம் செயல்படுத்துவதற்கு உங்களுக்கு வக்கில்லை என்று சொன்னேன். அதற்கெல்லாம், அவர்களுக்கு கோபம் வரவில்லை. காவிரியில் தண்ணீர் வரவில்லை என்று சொன்னதும், கோபம் வந்துவிட்டது. அதற்காக, என்னை இரவோடு இரவாக தஞ்சாவூரில் இருந்து காவல்துறையினரை அனுப்பி, அதிகாலையில் என் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். என்னைக் கைது செய்தார்கள்.

### பல்டி அடித்தார்கள்!

காவல்துறை என்னைக் கைது செய்து, தஞ்சாவூருக்கு அழைத்து வருகிறார்கள் என்று தெரிந்தவுடன், டெல்டாவில் இருக்கின்ற அனைத்து உடன்பிறப்புகளும் தஞ்சையில் ஒன்று கூடிவிட்டீர்கள். அதனால், தஞ்சாவூர் சென்றால் நிச்சயம் நம்மால் சமாளிக்க முடியாது என்று, காவல்துறையினர் வண்டியை செங்கிபட்டி காவல் நிலையத்துக்குத் திருப்பிவிட்டார்கள். அதுமட்டமல்லாமல், நீதிமன்றத்தில் இந்த அரசு சென்று மன்னிப்பு கேட்டது. `நாங்கள் அவரை கைதெல்லாம் செய்யவில்லை, விசாரித்து விட்டுவிடுவோம்' என்று பல்டி அடித்தார்கள். நம் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துக்குச் சென்று, `கைது செய்யக் கூடாது' என்று, அவர்களின் வாதங்களை எடுத்து வைத்தார்கள்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், இந்த டெல்டா மண்டலம் என்றைக்குமே `திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை' என்பதை நாம் மீண்டும் நிரூபித்துள்ளோம். ஏற்கனவே, சட்டமன்றத் தேர்தலில் புரிய வைத்தீர்கள். நண்பர் அன்பில் மகேஷ் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுப் பேசினார். டெல்டா மாவட்டங்களில் இருக்கின்ற சுமார் 30 தொகுதிகளில், வெறும் 4 தொகுதிகள் மட்டும்தான் இப்போது இருக்கின்ற ஆளுங்கட்சி வென்றுள்ளார்கள்.

இந்த புதிய அரசு அமைந்ததில் இருந்து, கடந்த 105 நாட்களாக இந்த அரசால் அதிகம் பாதிக்கப்பட்டது யார் என்று பார்த்தீர்கள் என்றால், விவசாயப் பெருங்குடி மக்கள்தான். அதற்கு ஒரு சிறிய உதாரணம், இதற்கு முன்பு இருந்த நம் திராவிட மாடல் அரசு, நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, கடந்த 5 வருடம் மேட்டூர் அணையிலிருந்து, சரியாக ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறந்திடுவார். இன்னும் சொல்லப்போனால், சில வருடம் அந்தத் தேதிக்கு முன்பாகவே தண்ணீரை நம் தலைவர் அவர்கள் திறந்துவிட்டுள்ளார்கள். ஆனால், இவர்கள் ஆட்சிக்கு வந்து, இன்றைக்கு என்ன நிலைமை. ஜூன் மாதம் முடிந்து, ஜூலை மாதம் முடிந்து, இப்போது ஆகஸ்ட் மாதம் முடியப்போகிறது. இப்போது வரைக்கும் மேட்டூரிலிருந்து தண்ணீரைத் திறந்துவிடவில்லை.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் கழகத் தோழர் கே.வெங்கடேஷின் புதல்வர் ராம்பிரசாத் – நந்தினி (எ) கற்பகவள்ளி ஆகியோரின் மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் முன்னாள் அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தெரிந்துகொண்டு பேசுங்கள்!

காவிரியில் தண்ணீர் இல்லை. டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி இப்போது முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால்தான் அந்தப் போராட்டத்திலும் சொன்னேன், மீண்டும் சட்டமன்றத்திலும் அதைப் பேசினேன். விவசாயிகளுக்குத் தயவுசெய்து இந்த அரசு வறட்சி நிவாரணம் கொடுக்க வேண்டும். அதற்கு இந்த முதல

## சர்க்காரா அல்லது சர்க்கஸ் கம்பெனியா?

மைச்சர் ஏதாவது பதில் சொன்னாரா? பதில் சொல்கிறேன் என்று சொல்லி, ஏற்கனவே சிறப்புத் தொகுப்பு கொடுத்துவிட்டோம் என்று சொன்னார். பிறகு நான் சொன்னேன், முதலமைச்சர் அவர்களே சிறப்பு தொகுப்புக்கும், வறட்சி நிவாரணத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. முதலில் அதை தெரிந்து கொண்டு பேசுங்கள் என்று அவையில் சொன்னேன்.

### விவசாயிகளுக்கு கொடுக்க நிதியில்லை கார் வாங்க மட்டும் நிதியுண்டா?

இன்று விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கொடுக்க அரசிடம் நிதி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் என்ன செய்திருக்கிறார்கள், ஆளுங்கட்சியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் வாங்கி கொடுக்க, இந்த அரசு முடிவெடுத்துள்ளார்கள். அதற்கு எங்கிருந்து வந்தது உங்களுக்கு நிதி? விவசாயிகளுக்குத் தேர்தல் வாக்குறுதியில் சொன்னதுமாதிரி, அவர்களின் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்வதற்கு நிதி இல்லை என்று இந்த முதலமைச்சர் சொல்லிவிட்டார். ஆனால், இன்றைக்கு `ஆளுங்கட்சியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம், கார்வாங்கிதருகிறேன்' என்று முதலமைச்சர் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறார். ஆனால் நம் தலைவர் தெளிவாகச் சொல்லிவிட்டார். நான் அதை சபையிலேயே பதிவு செய்துள்ளேன். `திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் யாருக்கும் இந்த அரசு கொடுக்கின்ற அந்த வாகனம் தேவையில்லை. முதலில் நீங்கள் விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள்' என்று சபையில் சொல்லிவிட்டேன்.

அதற்கும் சண்டைக்கு வருகிறார்கள். நான் என்ன சொன்னேன். நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகம், எங்கள் தலைவர் இந்த முடிவை எடுத்துள்ளார். விவசாயிகள் பிரச்சினையில் முதலில் கவனம் செலுத்துங்கள். அதற்கு நிதி இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். ஆட்சிக்கு வந்தவுடன் கஜானாவைத் துடைத்து வைத்துவிட்டு போய்விட்டோம் என்று சொல்கிறீர்கள்.

### கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை!

தேர்தல் வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை. மகளிர் உரிமைத்தொகை 2,500 ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்கள் அதையும் கொடுக்கவில்லை.

வருடத்துக்கு 6 கேஸ் சிலிண்டர் கொடுப்பேன் என்று சொன்னீர்கள் அதையும் கொடுக்கவில்லை. வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதம் 4,000 வழங்குவதாகக் கூறியிருந்தீர்கள், அதையும் வழங்கவில்லை.

கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாமல், இன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் வாங்கித் தருவதாக சொல்வதை, திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளாது; எங்களுக்கு அது வேண்டாம் என்று கூறிவிட்டேன்.

இன்று சட்டமன்றத்தில் நடப்பவற்றை நீங்கள் அனைவரும் தொலைக்காட்சியில் நேரலையில் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். இந்த ஆளுங்கட்சியினர் இன்று ஒவ்வொரு நாளும் என்னென்ன கூத்து களெல்லாம் செய்கிறார்கள் என்பதை நீங்கள் நேரலையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். முன்பெல்லாம் அவையில் பேசுவார்கள், கேள்வி கேட்பார்கள், அதற்குப் பதிலும் சொல்வார்கள். கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம், பாட்டு பாடினால், நான் எப்படிப் பாட்டுப் பாட முடியும்? இப்படி ஒரு கேடுகெட்ட ஆட்சி இன்று நடந்துகொண்டிருக்கிறது.

சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை, சட்டம் ஒழுங்கு பிரச்சினை இதைப் பற்றியெல்லாம் பேசலாம் என்று நாங்களெல்லாம் குறிப்புகளெல்லாம் எடுத்துக்கொண்டு போகிறோம். ஆனால், நாங்கள் கேட்கக்கூடிய எந்தக் கேள்விக்கும் முதலமைச்சர் எழுந்து பதில் சொல்வது கிடையாது. நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள், தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள்.

ஒரு மூன்று அமைச்சர்கள் மட்டுமே இருக்கிறார்கள். அனைத்துக் கேள்விகளுக்கும் அந்த மூன்று அமைச்சர்கள்தான் எழுந்து பதில் சொல்கிறார்கள். அதுவும் நாங்கள் கேட்கக்கூடிய கேள்விக்கான பதில் கிடையாது. அனைத்தையும் திசை திருப்புவது போலத்தான் இருக்கிறது. திசை திருப்பும் உத்திகள் (Diversion tactics), அவ்வளவுதான்.

### அவர்களுக்கு ரீல்ஸ் கிடைத்தால் போதும்!

உதாரணத்திற்கு, அன்று செந்தில் பாலாஜி அவர்கள் மின்சாரத் துறையில் மானியக் கோரிக்கையில் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் என்ன கேட்கிறார்? மின்சாரக் கட்டணம் இந்த மூன்று மாதங்களில் அதிகமாகிவிட்டது. அளவீட்டைச் சரியாக எடுக்கமாட்டேன் என்கிறார்கள் என்பதுதான் அவர் கேட்ட கேள்வி. ஆனால், சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல வக்கில்லாமல், அந்தப் பிரச்சினையைத் திசை திருப்புவது போல ஒரு பதிலைக் கூறுகிறார்.

தொடர்ந்து இந்த அரசு இதைச் செய்து கொண்டிருக்கிறது.

அமைச்சர் பெருமக்களும் ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும் மக்கள் பிரச்சினையைப் பேசுவதற்கு வரவில்லை. அவர்களுக்குத் தேவையானதெல்லாம் அன்று ஒரு நான்கு ரீல்ஸ் கிடைத்தால் போதும். இவர்கள் சர்க்கார் நடத்துகிறார்களா அல்லது சர்க்கஸ் கம்பெனி நடத்துகிறார்களா என்று கேட்கும் அளவுக்குத்தான் இன்று அரசின் செயல்பாடுகள் இருக்கின்றன.

இதையே சற்றுப் பின்னோக்கி பாருங்கள். கடந்த 5 ஆண்டுகளாக நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக நம் தமிழ்நாட்டைக் கொண்டுவந்தார். 11.19 சதவிகித வளர்ச்சியோடு இந்தியாவில் வளரும் மாநிலங்களில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு இருந்தது. இன்று அதைக்கொண்டு போய் பாதாளத்தில் தள்ளிவிட்டார்கள். இன்றைக்கு இந்த அரசாங்கம் ஒரு டம்மி அரசாங்கமாக, தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பின்னோக்கி இழுத்துக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் நடக்கும் எந்தப் பிரச்சினையைப் பற்றியும் இன்று இருக்கக் கூடிய முதலமைச்சருக்குக் கவலை கிடையாது. இவற்றையெல்லாம் இன்று மக்கள் பார்த்து, இப்போதுதான் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். எனவே, விரைவில் இந்த ஆட்சியாளர்களின் ஆணவத்திற்கும் கோமாளித்தனத்திற்கும் மக்கள் ஒரு சரியான பாடத்தைப் புகட்டுவார்கள் என்று கூறி, உங்கள் அனைவரின் சார்பாக மணமக்களை மீண்டும் வாழ்த்துகிறேன்.

மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள்: மணமக்கள் இருவருமே நன்கு படித்தவர்கள், அதிக அறிவுரை வழங்கத் தேவையில்லை. எம்.பி.ஏ (MBA) படித்திருக்கிறார்கள், அவர்களுக்கு ஒரேயொரு வேண்டுகோள் மட்டும் வைக்கிறேன். அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தை, அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஒரு அழகான தமிழ்ப் பெயரை அவர்கள் சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மணமக்களுக்கு மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவரின் சார்பாக என் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகரன், பழனிவேல், முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணாதுரை, பேராவூரணி அசோக்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, ஏனாதி பாலசுப்பிரமணியம், டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சாவூர் மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் இளையராஜா, மருத்துவர் அஞ்சுகம் பூபதி, பழஞ்சூர் செல்வம், ஜெயப்பிரகாஷ், கார்த்திகேயன் வேலுசாமி, சுப.சேகர், ரமேஷ், பொன்.சத்தியமூர்த்தி, மைக்கேலம்மாள், எஸ்.கே.செந்தில்குமார், நகரக் கழகச் செயலாளர் செந்தில்குமார், ரூஸ்வெல்ட், அப்துல் மஜீத், கௌசல்யா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில் வேந்தன், அழகிரி, வீரமணி, மருத்துவர் சந்திரசேகர், அரவிந்த் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் அவர்களின் முன்னாள் நேர்முக உதவியாளர் அரிகிருஷ்ணன் மறைவையொட்டி கரூர் மாவட்டம், தரகம்பட்டி தாலுகா, எருதிக்கோன் பட்டியில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கடவூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ராமலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் துரைராஜ் ஆகியோர் நேரில் சென்று, அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.




அரியலூர் மாவட்டம் தா.பழூர் கிழக்கு ஒன்றியம் கண்டியங்கொல்லை கிராமத்தில் நினைவில் வாழும் முன்னாள் செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர், மொழிப்போர் தியாகி க. சொ.கணேசன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் செயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் மு. கணேசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரகழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.